2001 செப்டம்பர் 3]

37 –

சம்பள உயர்வு

***1544—திருமதி கே. பவானி கருணாகரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு அமைப்பாளர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10–20

திருமதி கே. பவானி கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கமல பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, சத்துணவு தந்த சரித்திர நாயகன் அமரர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை இந்த நேரத்தில் நினைவுகூர்ந்து ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். சத்துணவு அமைப்பாளர்களுக்கு வேலைப் பளு அதிகமாக உள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் மீண்டும் மறுபரிசீலனை செய்து கருணை அடிப்படையில், அடுத்த ஆண்டாவது அவர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைப் பளு இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். இப்போது அவர்கள் பகுதி நேர பணியாளர்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பணி என்பது,

[2001 செப்டம்பர் 3

உண்ணுகின்ற குழந்தைகளின் வருகையைப் பதிவு செய்வது, அக்குழந்தைகள் வருகைக்குத் தக்கவாறு உணவுப் பொருள் எடுத்துச் செல்வது, குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவது, வரவு—செலவு புத்தகங்களைப் பராமரிப்பது. இந்தப் பணிகளை பகுதி நேர வேலைகளாக சத்துணவு அமைப்பாளர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 1996 ஆம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற சத்துணவு ஊழியர்கள் மாநாட்டிலே கலந்துகொண்டபோது, அப்போது முதல் முறையாக அவர்களின் ஊதியத்தை உயர்த்திக் கொடுத்து, அதை நிறைவேற்றுவதற்கு இரண்டு வருடங்கள் கழித்து 1998—லேதான் செயலாக்கம் செய்து இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்கள் வரிசையிலே பள்ளிச் சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தைகள் நலக் காப்பக அமைப்பாளர்கள், ஊட்டச் சத்து அமைப்பாளர்கள், அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய சமையலர்கள், உதவியாளர்கள் போன்றவர்களெல்லாம் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அதிலே பணியாற்றக்கூடியவர்கள் பெரும்பான்மையோர் பிளஸ் 2, பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு எல்லாம் படித்தவர்கள். இவர்கள் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களாலே கொண்டுவரப்பட்டு, இதுவரையிலே பணியாற்றி அவர்களுக்கு வயதும் கடந்துவிட்டது. அவர்களில் சிலருடைய குழந்தைகளுக்குத் திருமணம் ஆகக்கூடிய நிலையிலே, சிலருடைய குழந்தைகளுக்குத் திருமணமாகி, பேரக் குழந்தைகளும் எடுத்துவிட்டார்கள். ஆகவே இப்படி இருக்கக்கூடியவர்கள் வேறு அரசு வேலைக்குச் செல்ல முடியாது. ஆகவே வாழ்க்கைக்கு உத்தரவாதம் இல்லாத நிலையிலே மிகக் குறைவான சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலே, விலைவாசி உயர்வை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பகுதி நேரப் பணியாளர்களாக பணியாற்றக்கூடியவர்களை முழு நேரப் பணியாளர்களாக உயர்த்தி, பணி நிரந்தரம் என்ற அமைப்பிலே கொண்டுவந்து, கூடுதலாகச் சம்பளம் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். இன்றைக்கு காலியிடம் ஏற்படக்கூடிய அந்தச் சமையலர்கள், உதவியாளர்கள் போன்றவர்களை புதிதாக நியமனம் செய்கிறார்கள். அப்படி நியமனம் செய்யப்படுகின்ற நேரத்திலே 2 ரூபாய் சம்பளம்

2001 செப்டம்பர் 3]

கொடுப்பதாகச் சொல்லி பணி நியமனம் செய்யப்படுகிறது. 2 ரூபாயை வைத்துக்கொண்டு எப்படி அவர்கள் பிழைப்பை நடத்த முடியும்? இது கேள்விக்குரியதாக இருக்கிறது. ஆகவே இவர்கள் அனைவருக்கும் அரசு ஊதிய உயர்வு வழங்கி, முழு நேரப் பணியாளர்களாக மாற்ற முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த பரிசீலனை அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு என்பது ஒரு நிரந்தரமான திட்டம். அந்த நிரந்தரமான திட்டத்தில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் நிரந்தரம் இல்லாத ஒரு சூழ்நிலை இன்றைக்குத் தொழிலாளர்களிடையே இருந்துகொண்டு இருக்கிறது. ஆகவே குறைந்த சம்பளமாக இருந்தால்கூட இந்த அனைத்துப் பணியாளர்களையும் நிரந்தரப்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் கேட்ட கேள்வியையே மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களும் கேட்டிருக்கிறார்கள். இதுகுறித்து அரசின் ஆய்வில் இருக்கிறது. பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு முயற்சி செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆய்வுக்குப் பிறகு தெரிவிக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆய்வில் இருக்கிறது என்று அமைச்சர் சொல்லிவிட்டார்கள்.

வினா எண் 38, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

[2001 செப்டம்பர் 3

38—

மீன் இறங்கு தளம்

***3405—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி, வீரபாண்டியன் பட்டினத்தில் மீன் இறங்கு தளம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் நிதி உதவியுடன் மாநில அரசினால் தமிழ்நாட்டில் 10 இடங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் வீரபாண்டியன்பட்டினமும் ஒன்றாகும். இவ்விடத்தில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி மார்ச் 2002-க்குள் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியில் திருச்செந்தூர் அருகிலே இருக்கின்ற மீனவர் கிராமமான வீரபாண்டியன்பட்டினத்தில், இந்த ஆண்டிலே மீன் இறங்கு தளம் அமைப்பதற்காக புரட்சித் தலைவி அவர்கள், மக்கள் போற்றுகின்ற மகத்தான தலைவியாக இருக்கின்ற தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், அந்த இறங்கு தளம் அமைப்பதற்கான நிலையை ஏற்படுத்தியிருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது எத்தனை படகுகள், விசைப் படகுகள் இந்த இறங்கு தளத்தைப் பயன்படுத்த முடியும்? அப்படிப் பயன்படுத்துவதாக இருந்தால் எந்தெந்த பகுதிகளைச் சேர்ந்த விசைப் படகுகள் இந்த இறங்கு தளத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2001 செப்டம்பர் 3]

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. இதற்காக தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 39, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

குறுகிய கால வினா எண் 1, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(இரண்டாவது பட்டியல்)

1—

மேல்நிலைப் பள்ளியாக மாற்றுதல்

வினா 1113—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதியில் கொணவட்டம் அரசு உயர்நிலைப் பள்ளி, வினாயக முதலியார் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, வேலூர், சலவன்பேட்டை, கஸ்பா நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேல்நிலைப் பள்ளிகளாக இவ்வாண்டே மாற்ற எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:

வேலூர் தொகுதியில் கொணவட்டம் அரசு உயர்நிலைப் பள்ளி, வேலூர் சலவன்பேட்டை கஸ்பா நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தக்கோரும் கருத்துருக்கள் இவ்வாண்டு பெறப்படவில்லை. வேலூர் தொகுதியில் வினாயக முதலியார் அரசு